1987 நவம்பர் 17]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1987) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 47/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவில், சட்டமன்ற உறுப் பினர்களுக்கு தொலைபேசிக்காக கொடுக்கப்படும் தொகை

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ரூபாய 350 என்பது இப்போது ரூபாய் 450 ஆக ஆக்கப்பட்டிருக்கறது 1—4—1987 இல இருந்து. தொகுதி காரியங்கள் ஆற்றும் போது தொலைபேசிக்கான செலவுகள் மிக அதிகமாக ஆகிறது. ஆகவே இந்தத் தொகை போதாது என்பது எங்களுடைய கருத்து. அதைப் போல இரயில் கூப்பனுக்கான தொகையை 4,600-இல் இருந்து 5,650 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது 1—4—1987 முதல். ஏற்கெனவே 1—10—1987 முதல் இரயில்வே கட்டணம் 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலும் பற்றாக்குறை இருக்கிறது.

இன்னுமொன்று. மருத்துவ வசதி பெறுகிறவர்களுக்கு, வெளியே மருந்து வாங்குபவர்களுக்குப் பணம் கொடுப்பதாக அரசு சொல்லுகிறது. ஆனால் இந்தத் தொகையை எங்களால் வாங்க முடியாமல் இருக்கிறது. இதற்கான பில்லைக் கொடுத்தால் அந்த பில்லில் கடையின் சீல் வைக்க வேண்டும், அதை வசூலித்தவரின் கையெழுத்து இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதன் பிறகு அரசு டாக்டரிடம் சான்று வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதன் பிறகு அதைத் துறையிலே கொடுத்தால் அதற்கான பணம் வர பல மாதங்கள் ஆகின்றன. இதிலே 3 மாதங்கள் ஆகிவிட்டால் 15 சதவீதம் தள்ளுபடி என்றும், ஒரு வருஷம் கழித்து பில் கொடுத்தால் முழுவதும் தள்ளுபடி என்றும் சொல்லுகிறார்கள். இப்படிப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் காரணங்களால் அரசு ஒரு முடிவை எடுத்து, கடைகளில் வாங்கும் மருந்துகளுக்கு ஏதாவது ஒரு தொகையைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டு, அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை சட்டமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று

1987 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால் உறுப்பினர்கள் முழு ஆதரவையும் பெருந்தன்மையோடு தந்து இருக்கிறார்கள். இதை மேலும் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே நடைபெற்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்தின்போது, வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின்போது, சட்டமன்ற மானியக் கோரிக்கைகள் வந்தபோது அறிவித்தவைகளுக்கு இப்போது சட்டம் வருகிறது. அப்போது அறிவித்தவைகளுக்கு இப்போது சட்டத்தை நிறைவேற்றி 1—4—1987-லிருந்து பாக்கிகளை எல்லாம் சேர்த்து ஒட்டு மொத்தமாகத் தருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் மீதி இருக்கிற மாதங்களுக்கு எல்லாம், ஒட்டுமொத்தமாக இப்போது வருகிற பணத்தை வைத்து சரிக்கட்டிக்கொள்ளலாம். அடுத்து வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் பார்த்து, அடிக்கடி நாம் சொல்லும் வறட்சி நிலைகளை நன்றாக அறிந்து, பற்றாக்குறையை ஆய்ந்து, ஆராய்ந்து, தக்க முடிவெடுக்கலாம். இப்போது இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதன் மூலமாக இப்போதிருக்கும் சூழ்நிலையை ஒட்டி ஏற்கெனவே அறிவித்தவைகளைப் பெற முடியும். அதற்காக சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த எதிர்பாராச் செலவு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவிலே எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக் களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முக்கியமாக இந்த ஆண்டு வறட்சியினுடைய கடுமை நமது நாட்டைப் பாதித்தது போல, எங்களுடைய பகுதியாகிய தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய பகுதிகளும் மோசமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு, அங்கே குடி நீருக்கே சிரமப்படும் நிலைமை ஏற்பட்டு, அரசுக்கு அதை அவ்வப்போது தெரியப்படுத்தி, அரசும் ஓரளவுக்கு செய்தது என்றாலும், முழுவதுமாக குடிநீர் பிரச்சினையையும், வேலை வாய்ப்பு அளிக்கலையும் செய்ய முடியவில்லை. அதற்குக்

---

* 13—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.